NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 4 May 2017

# $150மி. முதலீட்டுடன் புதிய செயல்திட்டம் தொடக்கம்

மனித இயந்திரம் போன்றவற்றை சிங்கப்பூர் அதிகம் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிப்பதற்காக தேசிய ஆய்வு அறநிறுவனம் புதிய நாடளாவிய செயல்திட்டம் ஒன்றை நேற்றுத் தொடங்கியது.

கணினித் தகவல் அறிவியலுக்காக சிங்கப்பூரில் இருக்கும் ஆய்வு நிறுவனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒரு புதிய பங்காளித்துவ உறவுடன் அந்தச் செயல்திட்டம் தொடங்கியுள்ளது.

இந்த அறநிறுவனம் இந்தச் செயல்திட்டத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் $150 மில்லியன் வரை முதலீடு செய்யும்.

இந்தத் திட்டத்திற்கு AI.SG. என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இத்திட்டம் சமூகத்தையும் தொழில்துறையையும் பாதிக்கக்கூடிய முக்கியமான பிரச்சினைகளுக்கு மனித இயந்திரம் போன்ற செயற்கை அறிவைப் பயன்படுத்தித் தீர்வுகாண்பதில் ஒருமித்த கவனம் செலுத்தும் என்று செயல்திட்டத்தின் இணைத் தலைவர் பேராசிரியர் ஹோ டெக் ஹுவா கூறினார்.

இவர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் ஆய்வு, தொழில்நுட்பத் துறையின் துணைத் தலைவராக இருக்கிறார். சமூகமும் தொழில்துறையும் எதிர்பார்க்கக்கூடிய பெரும் பிரச்சினைகளைப் 'பிரம்மாண்டமான சவால்கள்' என்று இவர் வர்ணித்தார். இவற்றைச் சமாளிக்க அளவீடுகளை அடிப்படையாகக்கொண்ட குறிக்கோள்கள் தேவை என்று இவர் கூறினார்.

வாகன பயண நேரத்தை 10% குறைப்பது போன்றவை இவற்றில் அடங்கும்.

சிங்கப்பூரை தளமாகக் கொண்டுள்ள ஆய்வு நிறுவனங்களும் மனித இயந்திரம் போன்ற செயற்கை அறிவுத் தொழில்துறையில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களும் புதிதாகத் தொடங்கப்பட்டு உள்ள நிறுவனங்களும் புதிய செயல்திட்டத்தின் கீழ் செயல்பட்டு இதேபோன்ற தீர்வுகளை உருவாக்கும்.

இதற்கிடையே, 'சிங்கப்பூர் கணினித் தகவல் அறிவியல் கூட்டமைப்பு' என்ற ஒரு புதிய அமைப்பும் நேற்று தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் மூன்று பல்கலைக்கழகங்களும் அறிவியல், தொழில்நுட்பம், ஆய்வு முகவை அமைப்பும் இடம்பெற்று உள்ளன.

மரினா பே சாண்ட்ஸ் பெருங்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் நேற்று நடந்த ஒரு மாநாட்டில் தொடர்பு, தகவல் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம், இவற்றைப் பற்றி அறிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.